
தர்மாவரம்
ரேணிகுண்டா
நெல்லூர்
திருப்பதி
கூடூர்
பாக்காலா
அரக்கோணம்
சென்னை
பெங்களூர்
காட்பாடி
காஞ்சி
மைசூர்
ஜோலார்ப்பேட்டை
செங்கல்பட்டு
திருவண்ணாமலை
சாம்ராஜ நகரம்
விழுப்புரம்
கண்ணனூர்
சேலம்
கோயம்புத்தூர்
சிதம்பரம்
கள்ளிக்கோட்டை
திருச்சிராப்பள்ளி
தஞ்சாவூர்
திருச்சூர்
அறந்தாங்கி
மதுரை
ராமேஸ்வரம்
தனுஷ்கோடி
தூத்துக்குடி
திருநெல்வேலி
திருவனந்தபுரம்
கன்னியாகுமரி

உ

சிவமயம்

திருவண்ணமலைத் தல விளக்கம்

வெளியீடு:

திருவண்ணமலை

ஸ்ரீ அருணசலேசுவரர் தேவ ஸ்தானம்

தர்மகர்த்தர்கள்:

ஸ்ரீ B. வெங்கடாசலபதி செட்டியார் (சேர்மன்)
,, S. S. V. S. முத்தையா செட்டியார்
,, M. வடிவேல் கண்டர்
,, V. இராஜகோவிந்த செட்டியார்
,, T. V. சுப்பிரமணியம் செட்டியார்

நிர்வாக அதிகாரி:

ஸ்ரீ T. R. ஸ்ரீநிவாஸன்

(1956)

பதிப்புரிமை—தேவஸ்தானம்

விலை ரூ. 1 - 0 - 0

நாஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை-18.

★

இந் நூல் வெளியிடுவ தற்கு வேண்டிய உத்தரவு கள் அளித்து உற்சாக மூட்டிய சென்னை, அற நிலைய பாதுகாப்பு இலாகா கமிஷனர் ஸ்ரீ A. உத்தண்ட ராம பிள்ளை B.A., B.L., I.A.S. அவர்களுக்கு எங்கள் மன மார்ந்த நன்றி உரியதாகும்.

தர்மகர்த்தர்கள்

★

★

திருவண்ணாமலை மளிகை வியாபாரம் ஸ்ரீ ப. கோவிந்தசாமி செட்டியார் அவர்களால், ஸ்ரீ அண்ணாமலையார் சன்னிதி, ஸ்ரீ உண்ணாமுலையம்மன் சன்னிதி ஆகியவற்றில் சுமார் 15,000 ரூபாய் செலவில் ரத விளக்குகளும் சர விளக்குகளும் அமைக்கப் பெற்றுள்ளன.

★

நூன் முகம்

திருவருணைப் பதியின் திவ்ய புராண-சரித்திர வரலாறுகளையும், ஆலய அமைப்பு, பெருவிழாக்கள் குறித்த விபரங்களையும் சுருக்கமாக விளக்குவது இந் நூல்.

இப் புனிதத் திருத்தலத்தின் புகழ் முழக்கும் புராண இதிகாசங்கள் பல உள்ளன. ஆயினும் அவை அமைதியோடு அமர்ந்து சிரத்தையுடன் சிந்திப்பவர்க்கே பயன் தருவன.

திருவருணை ஞானச்ரமம், தவ சிரேஷ்டர் ஸ்ரீமத் ஈச்வர ஸ்வாமிகளால் அருளப் பெற்ற "அருணாசல மாகாத்மிய வசனம்" என்னும் நூல் 1928-ம் ஆண்டில் வெளியிடப் பெற்றது.

சென்னை, சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் செயலாளர், ஸ்ரீ ம. பாலசுப்பிரமண்ய முதலியார் B.A.B.L. அவர்கள் ஆக்கிய "திருவண்ணாமலை வரலாறு" என்னும் நூல் தேவஸ்தானத்தின் சார்பில் இருமுறை பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

மேற் குறித்த இரு நூல்களும் இந் நாள் விற்பனைக்குக் கிடைத்தில. ஆகவே அண்ணாமலை யண்ணலின் அருட்டிருக் கோலம் பற்றி அறிய விரும்பும் அன்பர்கட்கு இச் சிறு நூல் பயனுடைத்தாகு மென்று கருதுகிறேன்.

சிற்றறிவு காரணமாகக் குறைகள் காணப் பெறுதல் கூடும். பெரியோர் பொறுத்தருள் புரிவாராக.

இந் நூற்கு விஷயம் திரட்டுவான் வேண்டிப் பல நூல்கள் படிக்கும் வாய்ப்பும், பல்வேறு வகையான அவனது அருட்டிறத்தைப் பலகாலும் சிந்தையிற் கொள்ளும் பேறும் பெற்ற எனது பாக்கியத்தை எண்ணி எண்ணிக் களிக்கின்றேன்.

இப் பணியில் ஈடுபடுத்திய ஆலய தர்மகர்த்தர்களுக்கு என்றும் நன்றியுடையேன்.

ஈசான்ய மடம்
திருவண்ணாமலை
12—12—56

இராம்



இராஜ கோபுரத் தூணில் உள்ள
நாட்டியச் சிற்பங்களும் நங்கையும்



இந்திர தீர்த்தம்—ஆலயம்—மலை
படம் உதவி: பெல் ஸ்டுடியோ, திருவருணை



ஆலயத்தின் மேல் தோற்றம்
படம் உதவி: கே. வெங்கடராமன், B.A.

திரு அண்ணாமலையின் புகழேத்தும் தீந் தமிழ் நூல்கள்

1. தேவாரம்
2. திருவாசகம்
3. பதினோராந் திருமுறை
4. பெரிய புராணம்
5. கந்த புராணம்
6. திருப்புகழ்
7. சோண சைல மாலை
8. திருவருணைக் கலம்பகம்
9. அருணாசல புராணம்
10. அருணாசல மஹாத்மிய வசனம்
11. திருவருணை அந்தாதி
12. அருணகிரி அந்தாதி
13. அண்ணாமலை வெண்பா
14. அண்ணாமலை சதகம்
15. சாரப் பிரபந்தம்
16. கார்த்திகை தீப வெண்பா
17. சோணாசல வெண்பா
18. சோணாசல சதகம்
19. திருவருணைக் கலி வெண்பா
20. திருவண்ணாமலைத் திருவருட் பதிகம்
21. அருணாசலீசர் பதிகம்
22. அருணாசலேசுவரர் பதிகம் 2
23. உண்ணாமுலையம்மன் சதகம்
24. அருணாசலேசர் நவகாரிகை மாலை
25. உண்ணாமுலையம்மன் வருகைப் பதிகம்
26. அருணாசல சதகம்

27. அருணாசல அட்சர மாலை
28. அண்ணாமலையார் வண்ணம்
29. திருவண்ணாமலைப் பதிகங்கள்
30. அண்ணாமலைப் பஞ்ச ரத்னம்
31. திருவருணைத் தனி வெண்பா
32. அட்சரப் பாமாலை
33. ஸ்ரீ அருணாசலேசுவரர் உயிர் வருக்கம் படைத்தற் பாமாலை
34. அருணாசல அக்ஷர மண மாலை
35. அருணாசல நவ மணி மாலை
36. அருணாசல பதிகம்
37. அருணாசல அஷ்டகம்
38. அருணாசல பஞ்ச ரத்னம்

இன்னும் பல.

உள்ளுறை

1.	தலத் திருநாமங்கள் ...	1
2.	தலச் சிறப்பு ...	2
3.	மூர்த்தித் திருநாமங்கள் ...	3
4.	இலிங்கோற்பவம் ...	,,
5.	தேவி இடப் பாகம் பெற்றது ...	5
6.	தீப தரிசனம் ...	6
7.	அருணையைத் தரிசித்த அருந் தவத்தோர் ...	7
8.	வச்சிராங்கத பாண்டியன் ...	8
9.	வல்லாள மஹாராஜன் ...	9
10.	ஸ்ரீ அருணகிரி நாதர் ...	12
11.	குகை நமசிவாயர்-குரு நமசிவாயர் ...	13
12.	திருவண்ணுமலை நகரம் ...	,,
13.	தங்குமிடங்கள் ...	14
14.	முற்கால ஆட்சி ...	,,
15.	மலை-குகைகள்-தீர்த்தங்கள் ...	15
16.	ஆலய அமைப்பு ...	17
17.	தன வணிகர் தர்மங்கள் ...	23
18.	சீரமைப்பு ...	27
19.	திருவிளக்குப் பணி ...	28
20.	நித்திய பூஜா காலங்கள் ...	29
21.	பஞ்சப் பருவ விசேடங்கள் ...	,,
22.	உத்ஸவங்கள் ...	30
23.	விசேட உத்ஸவங்கள் ...	31
24.	கார்த்திகை தீப தரிசன பிரம்மோத்ஸவம்	33
25.	கல் வெட்டுகள் ...	34

“ அண்ணா மலைஎம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி ”

—திரு வாசகம்

திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேச்வரர்

ரத்ன கிரீடம்

வைர ஹஸ்தம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவண்ணமலைத் தல விளக்கம்

உண்ணமுலை உமையாளொடும்
உடன்ஆகிய ஒருவன்
பெண் ஆகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண் ஆர்ந்தன அருவித்திரள்
மழலைம்முழவு அதிரும்
அண்ணமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே.

—திருஞானசம்பந்தர்.

1. தலத் திருநாமங்கள்

இப் பிரசித்தத் தலம், முத்திபுரி, தலேச்சுரம், சிவலோகம், சுத்த நகரம், கௌரி நகரம், சோணசலம், சோணகிரி, சோணத்ரி, அருணசலம், அருணகிரி, அருணத்ரி, அனற்கிரி, திருவருணை, திருவண்ணமலை

என்னும் பல திருநாமங்களைத் தாங்கி விளங்குகின்றது. இதற்கு ஞானநகரம் என்ற விசேடமான பெயரும் உண்டு.

2. தலச் சிறப்பு

இத் தலம், ஆறு ஆதாரத் தலங்களுள் மணிபூரகத் தலமாகவும், பஞ்ச பூதத் தலங்களுள் நடு நாயகமான அக்நித் தலமாகவும், முத்தித் தலங்கள் நான்கனுள் நினைத்த மாத்திரத்தில் முத்தி நல்க வல்லதாகவும், நடு நாட்டுச் சிவத் தலங்கள் இருபத்திரண்டனுள் சிறப்புடைய ஒன்ருகவும், மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகப் பொருந்தியதாகவும், ஞானத் தபோதனர்க்கு உறைவிடமாகவும் அமைந்துளது.

மஹா சிவராத்திரியின் தோற்றுவாய் கொண்டதும், தேவிக்கு இடப்பாகம் அளித்ததும் இத்தலத்தின் தனிப் பெருஞ் சிறப்புகளாகும்.

"ஆதி நெடுமால் அயன்காண அன்றுபரஞ்
சோதிச் செழுஞ்சுடராய்த் தோன்றுமலை—வேதம்
முழங்குமலை சிந்திப்பார் முன்னின்று முத்தி
வழங்குமலை அண்ணு மலை."

"சத்திக்கு ஒருபாகம் தான்கொடுத்து நின்றமலை
முத்திக்கு வித்தாய் முளைத்தமலை—எத்திசையும்
போற்றுமலை போற்றிப் புகழ்வார் எழுபிறப்பை
மாற்றுமலை அண்ணு மலை."

—குரு நமசிவாயர்.

இன்னும் இருக் வேதம், அதர்வண வேதம், சரப உபநிடதம், சூத சங்கிதை, உருத்திர சங்கிதை, பாஸ்கர சங்கிதை, சிவ மஹா புராணம், சிவ ரஹஸ்யம், கந்த புராணம், பெரிய புராணம், அருணுசல புராணம், தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய அரிய நூல்கள் இத் தலத்தின் வியத்தகு மாண்பினை விரித்துரைக்கும்.

3. மூர்த்தி திருநாமங்கள்

இங்கு கோயில் கொண்டருளும் மூர்த்தியின் திருப் பெயர்கள் புராணங்களில் பலவாகக் கூறப் பெற்றுள்ளன. பிரசித்தமாக விளங்குவது:— "ஸ்ரீ அருணுசலேசுவரர்", "ஸ்ரீ அண்ணுமலையார்."

தேவியின் திருநாமம்:—"ஸ்ரீ அபீத குச நாயகி", "ஸ்ரீ உண்ணுமுலையம்மை".

தல விருட்சம்:—வகுளம் (மகிழ மரம்). ஆலமரம் எனவும் உரைப்பர்.

4. இலிங்கோற்பவம்

படைத்தற் கடவுளாகிய பிரமனும், காத்தற் கடவுளாகிய திருமாலும் தாந் தாமே பெரியரென்று அகங்காரங் கொண்டு தம்முட் பிணக்குற்ற காலை, முழுமுதற் பொருளாகிய சிவபெருமான், அவர்கள் முன்பாக "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் ஜோதி"ப்

பிழம்பாகத் தோன்றித், தமது 'அடியையேனும் முடியை யேனும் கண்டு வந்தவர் பெரியராவார்' எனத் திரு வாய் மலர்ந்தருளலும், திருமகள் மார்பன் வராக வடிவங் கொண்டு ஆழ்ந்து ஆழ்ந்து குடைந்து சென் றும், "பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்" காண இயலாது சோர்ந்து திரும்பினர். அன்ன உருத் தாங்கி ஆகாயத்தே உயர உயரப் பறந்தும், "வேதப் பொருண்முடிவாம் போதார் புனை முடியை" நண்ணு தற் கியலா நான்முகன் தயங்கி நிற்கையில், ஆங்குற்ற தாழம்பூ ஒன்றினைக் கண்டு அதன்பால் தனது விருத் தாந்தத்தை விளம்பினர்.

கங்கைநீர் மல்கும் திங்களார் சடையினின்றும் நழுவிய தான் நாற்பது ஆயிரம் ஆண்டுகளாக கீழ் நோக்கி வந்துகொண்டிருப்பதும், "பிறையணி முடி யைக் காண்டல் பிரமனே எவர்க்கும் ஆகா" எனவும் தாழம்பூவால் கூறக் கேட்ட பிரமன் தமது முயற்சி விடுத்துத் தனக்காகப் பொய்யுரை யொன்று புகல வேண்டித் தாழை மலரைச் சம்மதிக்கச் செய்து, திருமாலிடம் சென்று தாம் சோதி மணி முடி கண்ட தாக உரை செயலும், முற்றுணர்ந்த சிவபெருமான் பொய்யுரை செய்த பிரமனுக்குப் பூலோகத்தில் ஆலயம் அமையாதாவதென்றும், கரவுரை செய்த கைதை (தாழம்பூ) தமக்கு ஆகாதாவதென்றும் சாபமிட்டனர். பங்கயத்தானும், பாம்பணையானும் தங்கள் அகங்கார இருள் அகலப் பெற்றவராய் தன்னிகர் இல்லாத் தனிப்பெருஞ் சோதியைப் பரவிப் பணிந்து பிரார்த்



ஸ்ரீ உண்ணாமுலை உடன் ஆகிய
ஸ்ரீ அண்ணாமலை அண்ணல்

ஸ்ரீ உண்ணாமுலை அம்மை
படங்கள் உதவி: பெல் ஸ்டுடியோ, திருவருணை



சிவகங்கைத் தீர்த்தம்—ஆலயம்—மலை
—படங்கள் உதவி: மேயர் அண் கோ, சென்னை

சர்வசித்தி விநாயகர் சன்னிதி

திக்க, அவர்களின் பிரார்த்தனைக்கு இரங்கிய பெருமானார் சிவலிங்கத் திருவுருக் கொண்டு அமர்ந்தனர் என்ப. இதனை,

"என்னிகர் எவரும் இல்லென்று இருவரும் இகலும் எல்லை
அன்னவர் நடுவு தோன்றி அடிமுடி தெரியா தாகி
உன்னினர் தங்கட்கு எல்லாம் ஒல்லையில் முத்தி நல்கித்
தன்னிகர் இன்றி நின்ற தழற்பெருஞ் சைலம் கண்டார்."

—(உற்பத்தி காண்டம்—வழிநடைப் படலம்—11.)

"அரியும் யானும்முன் தேடும்அவ் அனற்கிரி அனல்
கிரியெ னும்படி நின்றதால் அவ்வொளி கிளர்ந்த
இரவதே சிவ ராத்திரி யாயினது இறைவற்
பரவி உய்ந்தனர் அன்னதோர் வைகலில் பலரும்."

—(தக்ஷ காண்டம்—அடிமுடி தேடு படலம்—96)

என கந்த புராணம் முழங்கும்.

இவ் வரலாறே இலிங்கோற்பவத்தின் தோற்றமாகும். கிருத யுகத்தில் அக்நி மலையாகவும், திரேதா யுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் பொன் மலையாகவும், கலியுகத்தில் கல் மலையாகவும் மாறிற்றென்பர்.

5. தேவி இடப் பாகம் பெற்றது

ஓர் கால் உமா தேவியார் விளையாட்டாக எம்பெருமானுடைய திருக் கண்களைப் புதைக்கவே, அக்கணம் பிரபஞ்ச மெங்கணும் பேரிருள் சூழலாயிற்று. அப் பேரிருள் வசப்பட்ட ஜீவகோடிகளின் துன்பத்துக்கு

ஆற்ருராய், அப் பாபந் தீர்க்க வேண்டித் தேவியார் காஞ்சிமா நகரம் சேர்ந்து பிருத்வியால் இலிங்கம் அமைத்துப் பூசனை புரிந்துவரும் நாளில், பத்தராய்ப் பணிவார்க்குப் பதம் அளிக்கும் பரமன் தோன்றி, திரு வருணையை அடைந்து தவமியற்றித் தமது இடப் பாகம் பெறுமாறு அருளிச் செய்தனர்.

அவ் வண்ணமே பார்வதி தேவியார் அருணு சலத்தை அடைந்து, பவழக் குன்று மலையில் பர்ண சாலை அமைத்துக், கௌதம முனிவரின் உதவியால் கடுந்தவம் புரிந்து வருகையில், ஆசையால் அறிவ ழிந்து அட்டகாசம் புரிந்து நின்ற அசுரர் தலைவனை மகிடாசுரன் என்பானை மர்த்தனம் செய்து, மன்பதை உய்யக் கார்த்திகைத் திங்களில் பெருவிழா நடத்திப் பௌர்ணமியோடு கூடிய கிருத்திகைப் பிரதோஷ காலத்தில் மலைமேல் ஜோதி ஸ்வரூப தரிசனம் கண்டு எல்லையிலாக் களிப்பெய்தி எம்பெருமானுரின் இடப் பாகம் பெற்றமர்ந்தனர்.

6. தீப தரிசனம்

இதன் காரணமாகவே வருடந்தோறும் இங்கு நடைபெற்று வரும் கார்த்திகை தீபப் பெருவிழாவின் பத்தாம் நாளாகிய தீப தரிசன தினத்தன்று, பிரதோஷ காலத்தில், அர்த்த நாரீஸ்வர மூர்த்தி எழுந்தருளிக் காட்சி கொடுத்து, அவ்வேளையில் மலையின் உச்சியில் ஜோதி ஸ்வரூபம் காட்டலும், அதே சமயத்

தில் ஆலயத்துள் பஞ்சமூர்த்திகளுக்குத் தீபாராதனை செய்தலும் வழக்கமாக நடைபெற்று வருகின்றன.

"கார்த்திகைக்குக் கார்த்திகைநாள் ஒருசோதி
மலைநுனியிற் காட்டா நிற்போம்
வாய்த்தஅந்தச் சுடர்காணில் பசிபிணியில்
லாதுஉலகின் மன்னி வாழ்வார்
பார்த்திவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிரும்அது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தில் இருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம் என்றார்."

—அருணாசல புராணம்.

7. அருணையைத் தரிசித்த அருந்தவத்தோர்

குமரவேள் தாருகாசுரனை வதம்செய்து தெற்கு நோக்கி எழுந்தருளிய காலத்து திருவண்ணாமலையைத் தரிசித்த வரலாறு, கந்தபுராணத்துள் காணக் கிடைக்கின்றது.

திருஞான சம்பந்தப் பெருமான் இப் பதி அடைந்து, இரு திருப் பதிகங்கள் பாடித் "தங்கு விருப்பில் வீற்றிருந்தார்" என்பது பெரிய புராணத்தால் அறியலாம்.

திருநாவுக்கரசு ஸ்வாமிகள் இங்கு எழுந்தருளி மூன்று திருப் பதிகங்கள் இயற்றினார். இதனை "பண்ணார் பதிகத் தமிழ் பாடிப் பணிந்து பரவிப் பணி செய்

தார்" என்னும் சேக்கிழார் பெருமானின் திருவாக்கால் அறியலாம்.

மாணிக்க வாசகப் பெருந்தகை இத் தலத்தில் பல காலம் தங்கினுர் என்பதை "திருவெம்பாவை" "திருவம்மானே" ஆகிய பாமாலேகளும் திருவாசகத்துள் காணப்பெறும் திருவண்ணுமலே பற்றிய ஏராளமான குறிப்புகளும் நன்குணர்த்துவ தாகும்.

சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள், நக்கீரர், கபிலர், பரணர், பட்டினத்தார் ஆகியவர்களும் திருவண்ணுமலேயைத் தரிசித்திருத்தல் கூடுமென்று கருதலாம். அவர்களுடைய பாடல்களில் இத் தலம்பற்றிய குறிப்புகள் நிறையக் காணக் கிடைக்கின்றன.

8. வச்சிராங்கத பாண்டியன்

இவர் புரவி மீதமர்ந்து வேட்டையாடி வருங்கால் ஒரு புழுகு (புனுகு) பூனேயைக் கண்டு அதனேத் துரத்த, அப் பூனே அண்ணுமலேயினே அடைந்து வலம் வந்து விழுந்து இறந்தது. பாண்டியன் ஏறிவந்த குதிரையும் கூடவே விழுந்து பட்டது. இரண்டும் உடனே இரு வித்தியாதரர்களாக மாறித் தாங்கள் இருவரும் துர்வாச முனிவரின் சாபத்தால் புழுகு பூனே யாகவும் குதிரையாகவும் பிறக்க நேர்ந்ததும், திருவண்ணுமலேயினே வலம் வந்த விசேடத்தால் சாபம் நீங்கப் பெற்றதும் கூறினர். இது கேட்ட பாண்டியன் அரசுரிமையைத் தமது புதல்வனை இரத்



வளை காப்பு மண்டபம்

படங்கள் உதவி: மேயர் அண் கோ, சென்னை

ஆயிரக் கால் மண்டபம்





வல்லாள மஹாராஜன் கோபுரம்

—படங்கள் உதவி: மேயர் அண் கோ, சென்னை

சத்தி விலாச சபா மண்டபம்

திருங்கதனிடம் ஒப்புவித்துத் தான் அண்ணுமலை நாதருக்கு அழகிய திருப்பணிகள் ஆற்றியும் வலம் வந்தும் தேவேந்திர பதவி பெற்ருன் என்று புராணம் கூறும்.

9. வல்லாள மஹாராஜன்

இரப்போர்க்கு இல்லை யென்னது வாரி வழங்கும் வள்ளற் கொடியுடைய *வல்லாள மஹாராஜன் என்னும் மன்னன் திருவண்ணுமலையைத் தலைநகராகக் கொண்டு அறநெறி வழாது ஆட்சி செலுத்தி வரும் நாளில், மன்னனது நீதி வழுவா நெறிமுறையின் உறுதியினைச் சோதிக்கத் திருவுளம் கொண்ட அண்ணுமலை யண்ணல், அடியவர் வடிவந் தாங்கி அரசவைக்கு எழுந்தருளினர். அடியவர் விஜயத்தால் ஆனந்தப் பெருக்கடைந்த அரசன், அடியார் பதம் பணிந்து வந்த காரியத்தை உரைத்தருள வேண்டலும்,

"உன்னையாம் கருதிவந்தது ஓதுவம்
உருஇல் மாரன்
பன்னும்ஐங் கணையால்இன்று படுத்திடும்
துயரை மாற்றக்
கன்னியை நல்கில் கீர்த்தி கடல்ஏழும்
வழங்கும் என்ருர்."

—அருணசல புராணம்.

---

* இவர் பதினன்காம் நூற்ருண்டினர் என்ப.

அரசன் ஏவலாளர்களை அனுப்பி அன்றிரவு அடியவருடன் இருக்கத் தக்க ஓர் கணிகை மாதை அழைத்து வருமாறு பணித்தனன். மங்கையோர் பாகம் கொண்ட மாதேவரின் லீலா விலாசத்தால் அன்றைய தினம் அருணையம்பதியிலுள்ள பரத்தையர் அனைவரும் பிறர் வயப்பட்டிருந்தமையால் அரசன் அழைப்புக்கு இயைந்திலர். அடியவரின் விருப்பம் நிறைவேற்ற இயலாது அரசன் அடைந்துள்ள அளவிலாத் துயரங் கண்ட இளைய ராணி சல்லமாதேவி என்பவர், அரசன் திருவுளம் கொண்டால் அரசனின் அடைக்கலமான தன்னுடைய சரீரத்தைக் கொண்டு அடியவர்க்களித்த வாக்கை நிலைநிறுத்தலா மென்றனள். "இல்லை யென்பது இல்லை" என்னும் தமது எழிற் கொடி தாழாது வழிகாட்டிய தன்னருந் துணைவியின் மாண்பினை வியந்து மன்னன் அகமிக மகிழ்ந்து அனுமதி யளித்தனன்.

இரவு பஞ்சணை சேர்ந்த சங்கமர், தூங்காமல் தூங்கும் துயிலில் ஆழ்ந்தவராய் இராப் பொழுதின் பெரும் பகுதி கழியவே, "வேந்தனு ருரைத்த வாய்மை வீண்பட லாகா" தென்றஞ்சிய அரசியார், அடியவர் துயில் நீக்கும் பொருட்டாக அவரது திருவடிகளைத் தீண்டலும், அக்கணம் அடியவரின் திருமேனி உருக்கரந்து பச்சைப் பசுங் குழவியாகிப் பாலசூரியன் என விளங்கியது.

அரசனும் அரசியும் ஆனந்தப் பெருக்குடையவராய்ப், பிள்ளைக் கலிதீர்க்கப் பெருமானே எழுந்தருளி

வந்த தங்கள் பாக்கியத்தை வியந்து குழந்தையை வாரி அணைத்த வேளையில், மார்புறத் தழுவிய மதலை மார்பகத்தே காணாது மாயமாய் மறைந்தது. சதிபதிகள் இருவரும் தங்கள் துர்ப்பாக்கியத்தை நினைந்து வருந்தலும் ஸ்ரீ அண்ணாமலைப் பெருமான் ஆகாய வீதியில் வெள்விடைமேற் றோன்றி, அரசே! "உமது பற்றற்ற பக்தி நிலையினை உலகுக்கு உணர்த்தும் பொருட்டாகவே யாம் அடியவர் வேடந் தாங்கி வந்தோம்;

"நற்புதல்வன் வேண்டும்என நாடியிருந் தாய்உனக்குப்
பொற்புதல்வன் என்ன நாம் போந்தனமே;—சொற்பயன்ஈது
என்ன இனிதே அறம் இயற்றி இப்புவியில்
மன்ன! இனி வாழ்வாய் மகிழ்ந்து."

"மைந்தன் இலை என்ற மனக்கவலை தீர்த்திடுவாய்;
அந்தம்உறில் என்தன் அடிஅடைவாய்;—வந்து உனக்கு
நாம்உத் தரகிரியை நன்குஇயற்று வோம்என்றான்;
மாமுத்தர் அன்பில் வருவான்."

—துரை வடிவேலனார்.

இதற்கிணங்க வருடந்தோறும் வல்லாள மஹாராஜனுக்கு ஈமக் கடன் செய்யும் பொருட்டாக, ஸ்ரீ அண்ணாமலை யண்ணல் மாசி மாதம் மக நட்சத்திரத்தில் பள்ளிகொண்டா பட்டுக்கு எழுந்தருளி உத்தரகிரியை நடாத்தும் உற்சவம் இன்றும் நடைபெற்று வருகின்றது.

10. ஸ்ரீ அருணகிரிநாதர்

திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருவகுப்பு முதலியன அருளிச் செய்த செந்தமிழ்ச் சந்தக் கவிராஜரான அருணகிரிநாதர் சரித்திரம் பலவாருக வழங்கப்பட்டு வருகின்றது. இவருடைய முற்பிறப்பு, தாய் தந்தையர், பருவ கால நிகழ்ச்சிகள் குறித்துக் கருத்து மாறுபாடுகள் உள்ளன. எனினும் இம் மஹான் திருவருளையில் அவதரித்தவ ரென்பதும், முருகப் பெருமானுடைய திருவருட் கடாட்சம் பெற்றுப் பல பாடல்களை இயற்றின ரென்பதும் யாவரும் ஒப்ப முடிந்த ஒன்ருகும்.

இவருடைய காலம் பதினைந்தாவது நூற்றுண்டின் மத்திய பகுதி என்பது, திருவண்ணுமலையில் அரசு புரிந்த பிரபுடதேவமாராயர் காலத்தில் ஆஸ்தான கவிஞரா யிருந்த சம்பந்தாண்டான் என்னும் தேவி உபாசகருடன் வாதிட்டு வென்ற நிகழ்ச்சியைக் கொண்டு அறியலாம்.

வாழ்க்கையில் சலிப்பெய்தி அறுமுகப் பெருமானின் அருட்பேற்றை நாடித் தவங்கிடந்தும் அவனருள் பெருமையால், அருணகிரிநாதர் இவ்வாலயத்தின் ஓங்கி வளர்ந்த கோபுரங்களுள் ஒன்ருகிய வல்லாள மஹாராஜன் கோபுரத்தின்மீதேறித் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் வேளையில், முருகவேள் தோன்றி அருணகிரிநாதரை ஆட்கொண்டருளித்



அம்மணி அம்மாள் கோபுரம்

—படங்கள் உதவி: மேயர் அண் கோ, சென்னை

கிளிக் கோபுரம்





ஸ்ரீ அண்ணாமலையார் திருச் சன்னிதி

—படங்கள் உதவி: மேயர் அண் கோ, சென்னை

ஸ்ரீ சம்பந்த விநாயகர் சன்னிதி



தம்மைப் "பாடும் பணியே பணியா"கச் செய்துவரக் கட்டளையிட்டனர் என்ப.

வேலவர் தாமே "முத்தைத் தரு" என அடியெடுத்துக் கொடுத்து தீட்சை செய்த வரலாறும், தலங்கள் தோறும் யாத்திரை சென்று அற்புதத் திருப் பாடல்கள் இயற்றிய வரலாறும், பிரபுடதேவமாராயருக்கு கம்பத்தில் கந்தவேளின் காட்சி காட்டிய வரலாறும் இவருடைய தனிச் சரித்திர வரலாறுகளில் விரிவாகக் காணத் தகும்.

11. குகை நமசிவாயர்—குரு நமசிவாயர்

சில நூற்ருண்டுகட்கு முன் இப் பதியில் குகை நமசிவாயர் என்ற திருநாமம் பெற்ற சைவப் பெரியார் அற்புதமான சித்திகள் பெற்று விளங்கினுர்.

இவருடைய சீடர், குரு நமசிவாயர். இவர் தாம் இருந்தவிடத்திருந்தே ஞானக் கண்ணுல் பல காட்சிகள் காணும் திறமை மிக்கவராயிருந்தார். தமது குருதேவரின் ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு தில்லைத் தலம் சேர்ந்து, ஆனந்தக் கூத்தருக்கு அழகிய திருப்பணிகள் ஆற்றிக் கட்டளைகள் பலவும் ஏற்படுத்தினர்.

12. திருவண்ணுமலை நகரம்

இந் நகர், வடஆற்காடு ஜில்லா, திருவண்ணுமலை தாலுகாவின் தலைநகராகும். (இத் தாலுகா 1911-ம் வருடம் வரையில் தென்னுற்காடு ஜில்லாவில் சேர்ந்

திருந்தது). விழுப்புரம், காட்டுப்பாடி இருப்புப் பாதை மார்க்கத்தில், விழுப்புரத்திலிருந்து 42-வது மைலிலும் காட்டுப்பாடியிலிருந்து 58-வது மைலிலும் உள்ளது. சென்னை, பெங்களூர், சேலம், பாண்டிச்சேரி, வேலூர், காஞ்சீபுரம், கடலூர் முதலான நகரங்களிலிருந்து நேரான பஸ் மார்க்கங்களும் உள்ளன.

இந் நகரம் இரண்டாந்தர நகரசபை (Municipality)யாக அரசாங்கத்தாரால் ஏற்கப்பட்டுள்ளது. நகர சபையாரின் கணிதப்படி இந் நகர்வாழ் மக்களின் தொகை சுமார் 50,000 ஆகும்.

இங்கு டெப்டி கலெக்டர் (Deputy Collector) ஆபீஸ், முன்ஸீப் கோர்ட், சர்க்கார் கஜானு, டெலிபோன் எக்சேஞ்சு நிலையம் ஆகியனவும், 3 உயர் தரப் பள்ளிகளும், 1 நடுத்தரப் பள்ளியும், 16 ஆரம்பப் பள்ளிகளும், 3 மருத்துவ நிலையங்களும் உள்ளன.

13. தங்குமிடங்கள்

இந் நகரில் விசேட காலங்களில் வெளியூர்களிலிருந்து வரும் மக்கள் தங்குவதற்கான விடுதிகளும் மடங்களும் நிறைய உள்ளன.

முனிஸிபல் நிர்வாகத்தின் கீழ் பிரயாணிகள் விடுதி (Travellers Banglow) ஒன்றும் உளது.

14. முற்கால ஆட்சி

இத் தலம் முன்னாளில் சோழ மன்னர்களால் ஆளப்பட்டு வந்ததெனவும், கி. பி. பதினான்காம் நூற்

ருண்டில் ஹொய்சள வமிசத்தினர் இந்நகரையே தலை நகராகக் கொண்டு அரசு செலுத்தி வந்தனர் எனவும், பின்னர் விஜயநகர மன்னர்களும், தஞ்சாவூர் நாய்க்க மன்னர்களும் ஆண்டு வந்தனர் எனவும் கூறப்படு கின்றது.

பதினேழாம் நூற்றுண்டில் இப் பிரதேசம் கர்நாடக நவாப்பின் ஆளுகைக்கு உட்பட்டது. கி. பி. 1753 முதல் கி. பி. 1760 வரை மிகுந்த குழப்பத்திற் குள்ளாகி, முராரி ராயர், கிருஷ்ண ராயர், மிருத்திஸ் அலிகான், பர்க்கத் உல்லாகான், (பிரெஞ்சு) சூப்பிரே (Soupires), சாபினே (Soubinet), (ஆங்கில காப்டன்) ஸ்டீபன் ஸ்மித் (captain Stephen Smith) முதலி யோர் இந் நகரினை முற்றுகையிட்டு மாறி மாறி வெற்றியும் தோல்வியும் அடைந்தனர். கி.பி. 1790-ல் திப்பு சுல்தான் கைக்கு வரலாயிற்று.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் இந் நகர் ஆங்கிலேயரின் கைக்கு மாறியது.

15. மலை, குகைகள், தீர்த்தங்கள்

இங்கு வானுற ஓங்கி வளம் பெற விளங்கும் மலை யினை ஸ்ரீ அண்ணுமலை யண்ணலின் புனிதத் திருவடி வாகவே மக்கள் போற்றி வணங்குவர்.

இதன் உச்சி, கடல் மட்டத்திற்கு மேல் 2668 அடி உயரமுள்ளதெனக் கணிக்கப் பெற்றுள்ளது. இதன் நாற்புறமும் நன்கு செப்பனிடப் பெற்ற கப்பி ரோடு

112943

Q.913;38, 9116

அமைந்து கிரிவலம் வருவோர் சிரமமில்லாது இராப் பகல் எந்நேரத்திலும் எளிதில் வரக் கூடியதாக உள்ளது. இதன் சுற்று எட்டு மைல்கள் ஆகும்.

மலையைச் சுற்றி எண்திசைகளிலும் அஷ்ட லிங்கங்கள், அஷ்ட நந்திகள் ஆகியனவும், முன்னூற் றறுபதுக்கு மேலான தீர்த்தங்களும், பல மண்டபங் களும், ஆச்ரமங்க்ளும் உள்ளன.

மலைப் பிராகாரத்தில், சக்கர தீர்த்தம், அக்நி தீர்த் தம், பாண்டவ தீர்த்தம், ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகள் சமாதி நிலையம், ஸ்ரீ ரமணுச்ரமம், பாலி தீர்த்தம், சிம்ம தீர்த்தம், யம தீர்த்தம், சோண நதி, உண்ணுமுலை தீர்த்தம், வருண தீர்த்தம், கௌதமர் ஆச்ரமம், அடி அண்ணுமலை என வழங்கும் அணி அண்ணுமலை ஆலயம், மாணிக்கவாசகர் ஆலயம், அசுவினி தீர்த்தம், ஸ்ரீ ஈசான்ய ஞான தேசிகர் சமாதி நிலையம், ஸ்ரீ துர்க்கை யம்மன் ஆலயம், அதனுள் கட்க தீர்த்தம், பவளக் குன்று ஆகியவை உள்ளன.

மலையின் மத்திய பாகத்தில் ஸ்ரீ கந்தாச்ரமம், விருபாக்ஷ குகை, குகை நமசிவாயர் ஆலயம், மாமரத் துக் குகை, சடைச்சாமி குகை, அருட்பால் குகை முதலியனவும், பாத தீர்த்தம், முலைப்பால் தீர்த்தம் முதலிய தீர்த்தங்களும் உள்ளன.

வருடத்தில் இரு முறை (கார்த்திகை, தை மாதங் களில்) ஸ்ரீ அண்ணுமலைப் பெருமான் கிரி வலம் எழுந் தருள்வார்.



மகிழ மரம்

—படங்கள் உதவி: மேயர் அண் கோ, சென்னை.

திருக் கல்யாண மண்டபம்



ஸ்ரீ உண்ணாமுலை அம்மன் திருச் சன்னிதி

—படங்கள் உதவி: பெல் ஸ்டுடியோ, திருவருணை

வெள்ளி இந்திர விமானங்கள்





மலையின் உச்சியில் கார்த்திகை மாதம் திருக் கார்த்திகை தினத்தில் ஜோதி தரிசனம் காட்டப் பெறும். பெரிய செப்புக் கொப்பரை ஒன்றில் நெய், கற்பூரம், வஸ்திரம் ஆகியவற்றைச் சேர்த்து தீபமிடப் பெறும். தீபத்திற்கு வேண்டிய நெய் முதலியன தேவஸ்தானத்தின் கண்காணிப்பில் சுத்தமானதாகச் சேகரித்து வைக்கப் பெறும். பிரார்த்தனையாளர்களும் பக்தர்களும் தேவஸ்தானத்தில் உரிய அளவு பணம் செலுத்தி சிப்பந்திகள் மூலமாக நெய், கற்பூரம், வஸ்திரம் ஆகியன திட்டப்படி மலைக்கு அனுப்பித் தீபத்தில் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்வர்.

அண்ணாமலையை நாடி வந்து தன்னிகரில் சித்தி பெற்ற தவ சிரேஷ்டர்களுக்கு அளவில்லை. அவர் களில் விருபாக்ஷ தேவர், ஈசான்ய ஞானதேசிகர் சேஷாத்திரி ஸ்வாமிகள், ரமண மகர்ஷிகள் ஆகியோர் குறிப்பிடத் தக்கோராவர்.

மலையின் மத்திய பாகத்திலும், அடிவாரத்திலும் குகைகள், ஆச்ரமங்கள், தீர்த்தங்கள் நிறைய உள்ளன. அவைகளில் இன்றும் சாதுக்கள் வாசம் செய்து வருகின்றனர்.

16. ஆலய அமைப்பு

இங்குள்ள திருக்கோயில் நமது நாட்டின் மிகப் பெரிய திருப்பணிகள் சிலவற்றுள் குறிப்பிடத் தக்க ஒன்றாகும். பழமையின் அடிப்படையில் புதுமையின்

ஒளி வீசுவதை இவ்வாலயத்தின் சிறப்ப ஓவியங்கள் நன்கு புலப்படுத்தும். இக் கோவில் சுமார் 24 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் அமைந்துள்ளது.

ஆரும் பிராகாரம் என்று கூறப்படும் வெளிப் பிராகாரத்தில் உள்ள திருமதில் மிக உயரமாகவும், கனமாகவும், உறுதியாகவும், கருங்கல்லினல் கட்டப் பெற்றுள்ளது. திருமதிலின் மத்தியில் நான்கு பக்கங் களிலும் நான்கு உயரமான கோபுரங்கள் வானேங்கி விளங்குகின்றன. கீழ்த் திசையிலுள்ள பெரிய கோபுரம் (ராஜ கோபுரம்) 11 நிலைகளுடன் 217 அடி உயரம் உள்ளது. இதன் அடி நிலை 135 அடி நீளமும், 98 அடி அகலமும் கொண்டதாகும். தெற்குத் திசையி லுள்ள பெரிய கோபுரத்தைத் திருமஞ்சனக் கோபுரம் என்றும், மேற்குத் திசையிலுள்ள பெரிய கோபுரத் தைப் பேய்க் கோபுரம் என்றும், வடக்குத் திசையி லுள்ளதை அம்மணி அம்மாள் கோபுரம் என்றும் வழங்குவர். (இக் கோபுரம் சுமார் 200 ஆண்டுகட்கு முன் அம்மணி அம்மாள் என்ற தபஸ்வினியால் நிர்மாணிக்கப் பெற்றது என்பர்).

இராஜ கோபுரத்தின் உள் பாகத்தில் வலப்புற மாக அமைந்திருப்பது ஆயிரக்கால் மண்டபம். இடது புறம் காணப்படுவது கம்பத்து இளையனர் திருச் சன்னிதி. இதன் மூலத்தானம், வளைகாப்பு மண்டபத் தின் வடகீழ்ப் பாரிசக் கம்பத்தில் அமைந்துள்ளது. இஃது ஸ்ரீ அருணகிரிநாதரின் பிரார்த்தனைக்கு

இரங்கிப் பிரபுடதேவ மாராயருக்குக் கருணைக் கடவுள் கந்தப் பெருமான் கம்பத்தில் காட்சியருளிய இடமாகும்.

இச் சன்னிதியின் தென்புறமாக நாற்புறமும் திருமாளப் பத்தி மண்டபத்துடன் அமைந்திருப்பது 'சிவகங்கை' என்னும் புண்ணிய தீர்த்தம். இதன் வடமேல் திசையில் காணப் பெறுவது 'சர்வ சித்தி விநாயகர்' சன்னிதி. சிவகங்கையின் கீழ்ப்புறமாகவும் தென்புறமாகவும் காணப் பெறுவது ஐந்தாம் பிராகாரம்.

சர்வ சித்தி விநாயகர் சன்னிதியின் வடபால் ஆயிரக்கால் மண்டபத்தின் தென் மேற்குத் திசையில் இருப்பது 'பாதாள லிங்கேசுவரர்' சன்னிதி. இங்கு ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் பலகாலம் தங்கித் தவமியற்றினர். இச் சன்னிதி திருவண்ணுமலை ஸ்ரீமதி பெரோசா தலையார்கான் அம்மையாராலும், சென்னை ஸ்ரீ ஜே. ஹெச். தாராபூர் அவர்களாலும் புனர் நிர்மாணம் செய்யப் பெற்று 14-5-1949-ல் முன்னுள் இந்திய கவர்னர் ஜெனரல் ஸ்ரீசக்கரவர்த்தி இராஜகோபாலாச் சாரியார் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது.

பெரிய நந்தியின் எதிரில் காணப் பெறுவது 'வல்லாள மஹாராஜன்' கோபுரம். ஸ்ரீ அருணகிரி நாதர் இக் கோபுரத்தின் மீதேறித் தமது ஊனுடலை நீக்கிக்கொள்ள எத்தனித்த காலையில் ஸ்ரீ முருகப் பெருமான் அவர் முன் தோன்றிக் காப்பாற்றி

யருளினர். இதன் வடபால் இருப்பது ஸ்ரீ கோபுரத்து இளையனுர் சன்னிதி.

"அடல்அருணைத் திருக்கோபுரத்தே
அந்த வாயிலுக்கு
வடஅருகிற் சென்று
கண்டு கொண்டேன்."

என்று அருணகிரிநாதர் ஆனந்தக் களிப்பெய்தியது இவ்விடமே. இங்கு ஸ்ரீ அருணகிரிநாதருடைய மூல விக்கிரஹமும் உத்ஸவமூர்த்தியும் உள்ளன. கோபுரத்தின் தென்பாரிசத்தில் தோற்றுவது ஸ்ரீ கல்யாண சுந்தரேசுவரர் சன்னிதி.

வல்லாள மஹாராஜன் கோபுரத்தின் உள்பகுதியில் வலதுபுறமாக வனப்புடன் திகழ்வது "சத்திவிலாச சபாமண்டபம்". இங்கு சமய சம்பந்தமான சொற்பொழிவுகள் நடைபெறும். இதன் மேல்புறம் உள்ளது புரவி மண்டபம். கோபுரத்தின் தென்பால் உள் மதிலைச் சார்ந்திருப்பது காலபைரவர் சன்னிதி. இங்குள்ள மூர்த்தி இணையற்ற வீராவேசத்துடன் ஜ்வலிப்பது காணத் தக்கதாகும். அருகில் அமைந்திருப்பதுவே "பிரம தீர்த்தம்" என்னும் புண்ணியத் தடாகம். இதன் மேல் பாரிசத்தில் தொடங்குவது நான்காம் பிராகாரமாகும். இப் பிராகாரத்தின் கீழ்த் திசையில் காணப்படும் பிரதான கோபுரம் "கிளிக் கோபுரம்" என்று வழங்கப் பெறும். இக் கோபுரத்தின் மீதும் கோபுரத்தின் முதல் நிலையிலும் கிளியின் உருவம்

அமைந்துளது. இஃது ஸ்ரீ அருணகிரிநாதர் கிளி வடிவந் தாங்கிப் பாரிஜாத மலர் கொண்டு வந்த காலத்துத் தாம் விட்டுச் சென்ற தமது திருமேனி யைக் காணது கிளி உருவாகவே யிருந்து "அநுபூதி" பாடியருளிய வரலாற்றை நினைவுறுத்துவதாகும்.

கிளிக் கோபுரத்தின் உட்புறம் எதிரில் தோற்றும் 16 கால் மண்டபம் எனப்படும் காட்சி மண்டபத்தில், கார்த்திகை தீபத் திருநாள் மாலையில் பஞ்ச மூர்த்தி கள் எழுந்தருளி மலையை நோக்கி நிற்க, ஏக காலத் தில் தீப தரிசனக் காட்சி நடைபெறும். இம் மண்ட பத்தின்எதிரில் மேல்புறமாக துவஜஸ்தம்பமும், பரணி தீபம் வைக்கும் அகண்ட தீப ஸ்தம்பமும் காணலாம்.

இது மூன்ரும் பிராகார மாகும். இப் பிராகாரத் தில், ஸ்ரீ சம்பந்த விநாயகர் சன்னிதி, மகிழ மரம், திருக்கல்யாண மண்டபம், ஸ்ரீ அருணகிரி யோகீசுவரர் சன்னிதி, தேவி உண்ணுமுலையின் திருச்சன்னிதி, யாகசாலை, காளத்தி லிங்கேசுவரர் சன்னிதி, தேவஸ் தான காரியாலயம், பழநியாண்டவர் சன்னிதி, ஏகாம்ப ரேசுவரர் சன்னிதி, ஜம்புலிங்கேசுவரர் சன்னிதி, பிடாரி- சப்த கன்னிமார் சன்னிதி, சிதம்பர லிங்கேசு வரர் சன்னிதி ஆகியவற்றைக் காணலாம்.

இப் பிராகாரத்தின் உள் மதிற் சுவர்களில் ஏராள மான பழமையான கல்வெட்டுகள் காணப் பெறும்.

ஸ்ரீ அண்ணுமலைப் பெருமான் திருச் சன்னிதியின் பிரதான வாயிலில் உள்ள ஸ்ரீ அதிகார நந்தீஸ்வரரைத்

தரிசித்து உள்ளே சென்ருல், ஆங்கு இரண்டாம் பிரா காரத்தில் சிவ க்ஷேத்திரத்துக்குரிய சகல மூலவர்களும், உத்ஸவ மூர்த்திகளும், சமயாசாரியர்களும், நாயன்மார் களும், ஸ்ரீ ருக்மிணி சத்யபாமா சமேத ஸ்ரீ வேணு கோபால ஸ்வாமியும் காட்சி யளிப்பர்.

இதன் மேல்பத்தியான முதற் பிராகாரத்தில் ஸ்ரீதெட்சணுமூர்த்தியும், சண்டிகேசுவரரும் விளங்குவர்.

இருதய ஸ்தானமாக விளங்கும் கர்ப்பக் கிருஹத் தில் ஸ்ரீ அண்ணுமலைப் பெருமான் லிங்காகார வடிவத் தில் அருட் காட்சி யளிக்கின்ருர்.

இரண்டாம் பிராகாரத்தில் வடதிசையில் உள்ள வைகுண்ட வாயில் வழியாகத் தேவியின் திருச் சன்னிதி சேரலாம். சன்னிதி முன்னுள்ள துவஜஸ் தம்ப மண்டபத்தில் நவக்கிரக மூர்த்திகள் விளங்குவர்.

தேவி சன்னிதியில் உள்ள மஹா மண்டபத் தூண்களில் அஷ்ட லட்சுமிகள், ருத்ர துர்க்கை, மஹா சக்தி, மஹா சரஸ்வதி, சித்தி விநாயகர், கார்த்திகேயர், காலாந்தகர், வீணுதரர், வீரபத்திரர் ஆகியோர் கண்கொள்ளாக் கலைத் திறனுடன் காணப் பெறுவர்.

கர்ப்பக் கிருஹத்தைச் சுற்றிய பிராகாரத்தில், ஸ்ரீ பராசத்தியம்மன், பரிவார மூர்த்திகள், சண்டசத்தி ஆகியவர் காட்சி யளிப்பர்.

ஸ்ரீ பராசத்தியம்மன் சன்னிதியின் வடபுறத்தில், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தாரால், ஸ்ரீ மாணிக்க வாசக ஸ்வாமிகள் அருளிய "திருவெம்பாவை"ப் பாடல்கள் சலவைக் கல்லில் பொறிக்கப் பெற்றுப் பதிக்கப் பெற்றுள்ளன.

கர்ப்பக் கிருஹத்தில் திரிபுவனேச்வரியான தேவி உண்ணுமுலை, திவ்ய மங்கள ஸ்வரூபியாகப் பேரெழிலுடன் பிரகாசிக்கின்ருள்.

17. தன வணிகர் தர்மங்கள்

இக் கோவில் மிகவும் கிலமாகி இருந்ததை, சுமார் 50 வருடங்கட்கு முன் நாட்டுக்கோட்டை நகரத்தார்களாகிய தனவணிகப் பிரமுகர்கள் முன்வந்து, சுமார் முப்பத்தைந்து லட்ச ரூபாய் செலவு செய்து ஆலயத்தைப் புதுப்பித்தும், திருவாபரணங்கள்—வாகனங்கள் முதலியன செய்து வைத்தும், 12-6-1903-ல் மஹா கும்பாபிஷேகம் நடாத்தினர்.

மீண்டும் நகரத்தார்களின் பேருதவி கொண்டு சுமார் ரூபாய் நாற்பது ஆயிரம் செலவில், தாரண ஆண்டு வைகாசித் திங்கள் 22-ம் நாள் (4-6-1944) பானு வாரம், திரயோதசி திதி, சுவாதி நட்சத்திரம், சித்த யோகம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 12-30-க்கு மேல் 16-15 நாழிகை அளவில் ஸிம்ம லக்கினத்தில் அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் செய்விக்கப் பெற்றது.

சில முக்கிய திருப்பணிகள்

திருப்பணியாளர்கள்	திருப்பணிகள்	செலவு மதிப்பு
கோட்டையூர், அ. க. வகையரு குடும்பத்தினர் சொந்தமாகவும் பிற நகரத்தார்களின் உதவி பெற்றும்	ஸ்வாமி கோவில், அம்மன் கோவில், அணியொட்டிக் கால் மண்டபம் முதலான திருப்பணிகள்	12,00,000
கோட்டையூர் அ. க. அ. மெ. குடும்பத்தினரும், ராம. பெ. குடும்பத்தினரும்	அணிஅண்ணுமலைக் கோவில் திருப்பணி, அக்ரஹார விடுதி, கும்பாபிஷேகம் (27-1-1918) நிலம்	3,50,000 50,000
கோட்டையூர் க. வீ. அள. குடும்பத்தினர்	சிவகங்கைத் தீர்த்தம், திருமாளப்பத்தி மண்டபம்-படி, சர்வ சித்தி விநாயகர் ஆலயம், வளைகாப்பு மண்டபம்	1,75,000
செட்டிநாடு, ராஜா, ஸர். அண்ணுமலை செட்டியார் அவர்கள்	பிரமதீர்த்தம் கருங்கல் திருப்பணி	75,000
இராமச்சந்திரபுரம் தி. சொ-தி. நா-தி. அ. குடும்பத்தினர்	திருக்கல்யாண மண்டபம்	50,000
கோட்டையூர், அ. க. குடும்பத்தினர்	துர்க்காம்பாள் ஆலயத் திருப்பணி	35,000
கோட்டையூர், ராம. பெ, குடும்பத்தினர்	16 கால் மண்டபத்தைச் சேர்ந்த கச்சு சாத்து மண்டபம் திருப்பணி	35,000
கோட்டையூர் அ. க. அ. மெ. குடும்பத்தினரும், அ. க. அ. சித. வெ. ந. அவர்களும்	பெரிய ராஜ கோபுரம் தொடங்கி பிரம்ம தீர்த்தம் வரை கருங்கல் தள வரிசை	25,000

சில முக்கிய ஆபரணங்கள்

நன்கொடையாளர்கள்	ஆபரணங்கள்	மதிப்பு
அரிமளம், செ. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள்	இரத்தின கிரீடம்	45,000
கானாடுகாத்தான், வெ. வீர. வெ. அரு. நாகப்ப செட்டியார் வகையரு	தனி அம்மன் இரத்தின கிரீடம்	30,000
கோட்டையூர் அ. க. அ. மெ. வெ. குடும்பத்தினர்	தங்க நாகாபரணம்	25,000
கொத்தமங்கலம், ராம. அரு. வெ. பெத்தாச்சி செட்டியார் அவர்கள்	வைர நெற்றிப்பட்டம் இரண்டு	21,000
கோட்டையூர் பெ. க. அ. சித. வீரப்ப செட்டியார் அவர்கள்	சோமாஸ்கந்தமூர்த்திக்கு வைர அபயஹஸ்தம்	15,000
கானாடுகாத்தான், சா. அ. அண்ணாமலை செட்டியார் அவர்கள்	மூலஸ்தான அம்மனுக்கு தங்க கவசம்	8,000
கோட்டையூர், அ. சு. ராம. மெ. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள்	ஸ்ரீ அண்ணாமலையார் மூலஸ்தான வைர நெற்றிப்பட்டம்	8,000
கொத்தமங்கலம், சி. அ. சி. ராம. ராமன் செட்டியார் அவர்கள்	உத்ஸவ விநாயகர் தங்க கவசம்	7,000
தேவகோட்டை எ. பெரி. கரு. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள் குமாரர்	சும்பத்திளையனூர் தங்க கவசம்	5,000

சில முக்கிய வாகனங்கள்

நன்கொடையாளர்கள்	வாகனங்கள்	மதிப்பு
இராமச்சந்திரபுரம் தி. சொ. தி. நா. தி. அ. குடும்பத்தினர்	வெள்ளி ரதம் கட்டிடம்	1,40,000
கோட்டையூர் பெ. க. அ. சித. வீரப்ப செட்டியார் அவர்களும் நகரத்தார்களும்	ஸ்வாமி தேர்	55,000
கோட்டையூர், அ. க. அ. மெ. குடும்பத்தினர்	பெரிய வெள்ளி ரிஷபம் கட்டிடம்	45,000
கோட்டையூர், பெ. க. அ. சித. வீரப்ப செட்டியார் அவர்கள்	வெள்ளி பெரிய இந்திர விமானம்	40,000
,,	வெள்ளி சின்ன இந்திர விமானம்	18,000
காரைக்குடி, முத்து. அரு. குடும்பத்தினர்	வெள்ளி, கற்பக விருக்ஷம் வெள்ளி, காமதேனு, கட்டிடம்	35,000 35,000
கானாடுகாத்தான் சா. ராம. மு. ராம. ராமசாமி செட்டியார் அவர்கள்	அம்மன் தேர்	20,000

வெள்ளி வாகனங்கள்

படங்கள் உதவி : பெல் ஸ்டுடியோ, திருவருணை



காமதேனு



கற்பக விருட்சம்

சிறிய ரிஷபம்



பெரிய ரிஷபம்

வெள்ளி ரதம்

ஸ்ரீ அண்ணாமலையார் மஹா ரதம்

படங்கள் உதவி:
பெல் ஸ்டுடியோ, திருவருணை

தெப்பம்

ஸ்ரீ உண்ணாமுலையம்மன் மஹா ரதம்

காரைக்குடி, சா. நா. சா. குடும்பத்தினரால் "சாதுக்கள் சத்திரம்" ஒன்றும், கோட்டையூர், மெ. க. குடும்பத்தினரால் "அன்னசத்திரம்" ஒன்றும், காரைக்குடி, முத்து. அரு. குடும்பத்தினரால் "வேத பாடசாலை" ஒன்றும், அவரவர் சொந்தப் பொருள் கொண்டு சொந்த நிர்வாகத்தில் நடை பெற்று வருகின்றன.

நகரத்தார்கள் பொதுவில் அமைத்துள்ள "ஓயா மடம்" என்ற மடம் ஒன்றும் நக்ரை அணி செய்கின்றது.

ஸ்ரீ அம்பிகையின் திருத்தேர் பழுதுபட்டிருந்ததை, தற்கால தர்மகர்த்தாக்களின் பிரயத்தினத்தின் பேரில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் இருபத்தையாயிர ரூபாய் செலவில் புதிய முறையில் புதுப்பிக்கப் பெற்று, 29-6-'56-ல் மிக விமரிசையாக வெள்ளோட்டம் செய்விக்கப் பெற்றது.

18. சீரமைப்பு

இவ் வாலயத்தில் முன்னுள் தர்மகர்த்தர்களான ஆற்காடு, ராவ்பஹதூர், தனகோட்டி முதலியார் அவர்களும், இராமச்சந்திரபுரம், தீ. சொ. முருகப்ப செட்டியார் அவர்களும், கோட்டையூர், பெ. க. அ. சித. வீரப்ப செட்டியார் அவர்களும், ஸ்ரீ அண்ணமலையார் திருப்பணியில் பேரார்வங் கொண்டு சிறிதும் சலிப்பின்றித் திறம்படச் செயலாற்றியதன் காரணமாக, ஆலயத்தின் புனரமைப்பும், பெருவிழாக்களும், காட்சிக்கும்

கருத்துக்கும் பெருவிருந்தாக விளங்குகின்றன. அவர்களுடைய அரும் பெரும் கைங்கர்யங்கள் என்றும் மறக்க இயலாதவையாகும்.

பெரிய (ராஜ) கோபுரத்தின் வடபால் இருக்கும் திட்டுவாசல் முன்புள்ள "சித்திர மண்டபம்" திருவண்ணுமலே ஸ்ரீமான் ராமு முதலியார் வகையினரால் நிர்மாணிக்கப் பெற்றது.

சில ஆண்டுகட்கு முன்பாக, திருப்பத்தூர் ஸ்ரீமான் சூரியநாராயண செட்டியார் அவர்களால், திருமஞ்சனக் கோபுரம் பழுது பார்த்துச் சீரமைக்கப் பெற்றது,

அன்னவரால் ஸ்ரீ அண்ணுமலேயார் ஆலயத்தில் தினந்தோறும் திருமுறை ஓதும் பொருட்டாக, தேவார பாடசாலே அமைக்கப் பெற்று நடந்து வருகின்றது.

19. திருவிளக்குப் பணி

கோட்டையூர், அ. க. அ. மெ, குடும்பத்தினர் சுமார் 35 ஆண்டுகட்கு முன்பாக, ஆலயத்தில் மின்சார விளக்குகள் அமைத்து அதற்கெனத் தனியாக எலெக்டிரிக் எஞ்சின் வாங்கி வைத்துள்ளனர்.

மின்சார விளக்குகள் அமைத்து நீண்ட காலம் ஆனமையால், அவைகள் ஆங்காங்கு துண்டிக்கப் பெற்றுப் பழுதடைந்துள்ளன. மீண்டும் புதிதாக (Rewiring) நிர்மாணிக்க வேண்டிய நிலேயில் இருக்கின்றது. இக் கைங்கர்யத்திற்குச் சுமார் இருபத்தையா

யிரம் ரூபாய் வரையில் செலவாகலாம். புண்ணிய வான்களான தனவந்தர்கள் மனங் கொள்ள வேணு மென்று ஸ்ரீ அண்ணுமலை யண்ணலின் திருவருளைப் பிரார்த்திக்கின்ருேம்.

20. நித்திய பூஜா காலங்கள்

1.	உஷத் காலம்	காலை	மணி	7-30
2.	கால சந்தி	,,	,,	9-30
3.	உச்சிக் காலம்	பகல்	,,	11-30
4.	சாயரக்ஷை	மாலை	,,	5-30
5.	இரண்டாங் காலம்	இரவு	,,	8-30
6.	அர்த்த ஜாமம்	,,	,,	9-30

21. பஞ்சப் பருவ விசேடங்கள்

பிரதி மாதப் பிறப்பு
,, சோம வாரம்
,, சுக்கிர வாரம்
,, சனிக்கிழமை
,, அமாவாசை
,, கிருத்திகை
,, பௌர்ணமி
,, பிரதோஷம்
,, சுக்ல சதுர்த்தி
,, ,, சஷ்டி

22. உத்ஸவங்கள்

சித்திரை மாதம்		வசந்த உத்ஸவம் (மிருகசீர்ஷ நட்சத்திரம் தொடங்கி 10 நாட்கள் நடைபெறும்).
ஆனி	,,	தெட்சணுயன பிரம்மோத்ஸவம் (10 நாட்கள் நடைபெறும்).
ஆடி	,,	ஆடிப் பூர உத்ஸவம். கடைசி நாள் தீ மிதி விழா (10 நாட்கள் நடைபெறும்).
புரட்டாசி	,,	நவராத்திரி உத்ஸவம் (10 நாட்கள் நடைபெறும்).
ஐப்பசி	,,	ஸ்கந்த சஷ்டி உத்ஸவம் (6 நாட்கள் நடைபெறும்).
கார்த்திகை	,,	பிரம்மோத்ஸவம்—தீபத் திருவிழா (10 நாட்கள் நடைபெறும்).
மார்கழி	,,	மாணிக்கவாசகர் உத்ஸவம் (10 நாட்கள் நடைபெறும்).
தை	,,	சங்கராந்தி உத்ஸவம் (10 நாட்கள் நடைபெறும்).
பங்குனி	,,	உத்திரத் திருவிழா (ஆறு நாட்கள் நடைபெறும்).



உத்ஸவர் ஆபரணங்களில் சில



பஞ்ச மூர்த்திகள் தீப ஆராதனை வெள்ளிச் சாமான்கள் சில.

—படங்கள் உதவி : பெல் ஸ்டுடியோ, திருவருணை



துர்க்காம்பாள் ஆலயமும் பவளக் குன்றும்.

—படங்கள் உதவி : மேயர் அண் கோ, சென்னை.

அணி அண்ணாமலை ஆலயம்.

23. விசேட உத்ஸவங்கள்

சித்திரை	மாதம்	ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் (திருவோண நட்சத்திரம்).
,,	,,	ஸ்ரீ திருநாவுக்கரசர் உத்ஸவம் (சதய நட்சத்திரம்).
வைகாசி	,,	அபிஷேகம் (விசாக நட்சத்திரம்).
,,	,,	ஸ்ரீ திருஞானசம்பந்தர் உத்ஸவம் (மூல நட்சத்திரம்).
ஆனி	,,	ஸ்ரீ மாணிக்கவாசகர் உத்ஸவம் (மக நட்சத்திரம்).
,,	,,	ஸ்ரீ நடராஜர் திருமஞ்சனம் (உத்திர நட்சத்திரம்).
ஆடி	,,	அம்பாள் நிறையணி (வரலட்சுமி நோன்பு).
,,	,,	ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் உத்ஸவம் (சுவாதி நட்சத்திரம்).
,,	,,	ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி ஸ்ரீ அருணகிரிநாதர் விழா (சுதந்திர தினம்)
ஆவணி	,,	விநாயக சதுர்த்தி.
,,	,,	ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி.
,,	,,	பிட்டுத் திருவிழா (மூல நட்சத்திரம்)
,,	,,	ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் (சுக்ல-சதுர்த்தசி).

புரட்டாசி	,,	சரஸ்வதி பூஜை, அம்பாள் நிறையணி (சுக்ல - நவமி),
,,	,,	ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் (சுக்ல-சதுர்த்தசி).
,,	,,	ஸ்ரீ அருணகிரிநாதர் (மூலம்) திரு நட்சத்திரம்.
ஐப்பசி	,,	அன்னுபிஷேகம் (அசுவினி நட்சத்திரம்).
கார்த்திகை	,,	1008 சங்காபிஷேகம் (சோம வாரம்).
மார்கழி	,,	வைகுண்ட ஏகாதசி.
,,	,,	திருவாதிரை விழா (ஆருத்ரா தரிசனம்).
தை	,,	திருவூடல் உத்ஸவம் (2-ம் தேதி).
,,	,,	மணலூர்பேட்டை தீர்த்தவாரி (5-ம் தேதி).
,,	,,	கலசபாக்கம் தீர்த்தவாரி (ரதஸப்தமி).
,,	,,	தைப் பூசம் (தீர்த்தவாரி).
மாசி	,,	பள்ளிகொண்டாபட்டு தீர்த்தவாரி, வல்லாள மஹாராஜன் உத்தரகிரியை (மக நட்சத்திரம்),
,,	,,	மஹா சிவராத்திரி (அமர-சதுர்த்தசி).
,,	,,	ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் (சுக்ல-சதுர்த்தசி).

24. கார்த்திகை தீப தரிசன பிரம்மோத்ஸவம்

இவ் விழா, கார்த்திகை மாதம் உத்தராட நட்சத்திரத்தில் துவங்கப் பெற்றுப் பத்தாவது நாளாகிய திருக் கார்த்திகை தினத்தன்று மஹா தீப தரிசனமும், பின்னர், தெப்பத் திருவிழாவும் கிரிப்பிரதட்சிணமும், நடைபெறும்.

திரு நாள்		முக்கிய வாகனங்கள், விபரங்கள்
முதல் நாள்		மூஷிகம், மயில், அதிகார நந்தி, அன்னம், சின்ன ரிஷபம்.
2-வது	,,	வெள்ளி இந்திர விமானங்கள் முதலியன.
3-வது	,,	சிம்மம், வெள்ளி அன்னம் முதலியன.
4-வது	,,	வெள்ளிக் கற்பக விருக்ஷம், வெள்ளிக் காமதேனு, இதர வெள்ளி வாகனங்கள்.
5-வது	,,	வெள்ளி மூஷிகம், வெள்ளி மயில், வெள்ளிப் பெரிய ரிஷபம் ஆகியன.
6-வது	,,	காலை, அறுபத்து மூவர் திருவீதி எழுந்தருளல். இரவு, வெள்ளி ரதம், வெள்ளி இந்திர விமானம் ஆகியன.
7-வது	,,	பஞ்ச மூர்த்திகள், திருத் தேர்.
8-வது	,,	மாலை, தங்க வண்ண மேரு, பிக்ஷாண்டவர் உத்ஸவம். இரவு, பஞ்ச மூர்த்திகள், குதிரை வாகனம் ஆகியன.

9-வது	நாள்	கைலாச வாகனம், காமதேனு வாகனம் ஆகியன.
10-வது	,,	உதயாத் பூர்வம், 4 மணிக்குப் பரணி தீபம். பகல் பிரம தீர்த்தம்—தீர்த்தவாரி. மாலை 6 மணிக்கு பஞ்ச மூர்த்திகள் தங்க வண்ண விமானங்களில் எழுந்தருளி, ஜ்யோதி ஸ்வரூப மஹா தீப தரிசனம். இரவு, தங்க வண்ண ரிஷபம் முதலியன.
11-வது	,,	அய்யன்குளம் என்னும் இந்திர தீர்த்தத்தில் தெப்பத் திருவிழா.
12-வது	,,	ஸ்ரீ அபீதகுசாம்பாள் சமேத ஸ்ரீ அருணசலேசுவரர் கிரிப் பிரதட்சிணம்.
13-வது	,,	சண்டிகேசுவரர் உத்ஸவம்.

25. கல் வெட்டுகள்

இங்கு நூற்றுக் கணக்கான கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் பலவற்றை, அரசாங்கத்துத் தென்னிந்திய கல்வெட்டுப் பதிவு நிலையத்தினர் படிவு செய்துள்ளனர். இவற்றை A. R. No 419 to 428 of 1929, 469 to 574 of 1952 என்று எண்ணிட்டுள்ளனர். இவற்றுள் 469 to 574 of 1952 எண்ணுள்ள கல்வெட்டுகள், தென்னிந்தியக் கல்வெட்டுகளின் எட்டாவது தொகுதியில் 57 முதல் 165 வரையுள்ள எண்ணுடன் (South Indian Inscription Vol, viii. Nos, 57 to 165) வெளியாகியுள்ளன.

சுபம்.